**12.10.2022**

**OS.No. 38/2022 PW : 1, திரு. கண்ணப்பன்**

**1முதல் 3, 5, 6, 8 முதல் 10, 12 மற்றும் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

நான் குமாரராஜபேட்டையில் குடியிருந்து வருகிறேன். அங்கே நான் பிறந்தது முதல் குடியிருக்கிறேன். 1ம் பிரதிவாதியான என் அக்கா அதே கிராமத்தில் தான் குடியிருக்கிறார். அவர் அங்கே கடந்த 20 வருடமாக குடியிருக்கிறார். 3ம் பிரதிவாதியான சாந்தியும் அங்கே கடந்த 15 வருடமாக குடியிருக்கிறார். 5ம் பிரதிவாதியான முருகேஷ் 1ம் பிரதிவாதியின் கணவர் ஆவார். 5ம் பிரதிவாதியின் சொந்த ஊர் அம்மனேரி என்ற கிராமம் ஆகும். அது ஆர்.கே.பேட்டை தாலுக்காவில் இருக்கிறது. அவருக்கு பெங்களூர் மற்றும் அம்மனேரியில் சொத்து இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கும் 5ம் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் ஆனது என்று எனக்கு தெரியாது. 5ம் பிரதிவாதி விவசாயம் செய்கிறார். 5ம் பிரதிவாதி தாவா சொத்துக்களில் சில அயிட்ட சொத்துக்களில் பயிர் செய்கிறார். அவர் எத்தனை வருடமாக அவ்விதம் பயிர் செய்கிறார் என்று எனக்கு தெரியாது. அவர் பூ, நெல் மற்றும் வேர்கடலை ஆகியவற்றை பயிர் செய்கிறார். அவர் பயிர் செய்து வரும் சொத்துக்களுக்கு தனியாக பட்டா வாங்கிவிட்டார். நானும், என் தந்தையும் சேர்ந்து 1996 மற்றும் 1998ல் பிராதின் சில அயிட்ட சொத்துக்களை 5ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. 1996, 1998வருடத்தில் இருந்து 5ம்

பிரதிவாதி தாவா சில சொத்துக்களில் நெல் விவசாயம் செய்து வருகிறார். அது என் தாத்தா சொத்துக்கள் ஆகும். அந்த சொத்துக்கள் என் தாத்தா சொத்துக்கள் என்பதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன். அவ்விதம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியான சாந்தி கூல்டிரிங்ஸ் மற்றும் டீ கடையை 10, 15 வருடமாக நடத்தி வருகிறார். அவர் கடை வைத்திருக்கும் இடமும் தாவா சொத்தில் வருகிறது. அந்த இடத்தை அவருக்கு யாரோ கிரையம் கொடுத்திருக்கிறார்கள். யார் என்று எனக்கு தெரியாது. எங்கள் இடத்தில் ஏன் டீ கடை வைத்திருக்கிறாய் என்று கேட்டோம். காவல் நிலையத்திற்கும் சென்றோம். எப்போது சென்றோம் என்று ஞாபகமில்லை. காவல் நிலையத்திற்கு சென்றதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. அவர் கடை வைத்து நடத்திவரும் விவரம் எனக்கு நேரடியாக தெரியும். அவர் 15 வருடமாக கடை நடத்திவருவதை எதிர்த்து அவர் ஆவணத்தை செல்லாது என்று கூறி இவ்வழக்கு தவிர வேறு வழக்கு எதையும் தாக்கல் செய்யவில்லை. 6, 7 மற்றும் 10 ஆகிய பிரதிவாதிகளை எனக்கு தெரியாது. 14ம் பிரதிவாதி தாவா சொத்தில் சில அயிட்ட சொத்துக்களில் வீடுகட்டி குடியிருக்கிறார். காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தோம். நீதிமன்றத்திற்கு செல்லுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். நான் எத்தனை ஏக்கரில் விவசாயம் செய்கிறேன் என்று கேட்டால் எனக்கு 3 ஏக்கர் கொடுத்தார்கள். அந்த 3 ஏக்கரின் நான்குமால்கள் எனக்கு தெரியாது. அந்த 3 ஏக்கரை என் தந்தை எனக்கு எழுதி கொடுத்தார்.

அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. 2ம் பிரதிவாதி வள்ளிமலை என்ற கிராமத்தில் குடியிருக்கிறார். 4ம் பிரதிவாதி எங்கள் ஊரில் குடியிருக்கிறார். 4ம் பிரதிவாதிக்கு இடம் இருக்கிறது எவ்வளவு இடம் என்று எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி செங்கல் சூலை நடத்திவருகிறார் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி கிரையம் வாங்கியதாக கூறப்படும் நான் தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணங்களில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் இல்லை. அதில் உள்ள கையெழுத்துக்களை கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்பலாம். அதற்கான நடவடிக்கை எடுக்க நான் தயாராக இருக்கிறேன். என் தந்தை அவரது மகள்களுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. என் தந்தை என்னுடைய சகோதரிகளுக்கும், எனக்கும் செட்டில்மெண்ட் ஆவணங்களை எழுதி கொடுத்து அவர் அவர் சொத்துக்களை அவர் அவர் அனுபவித்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னாரா என்று எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி டீ கடை நடத்தி வரும் சொத்து அவரது பாக சொத்தா என்று கேட்டால் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி 15 வருடமாக டீ கடை நடத்திவருவதை நான் ஆட்சேபனை செய்யவில்லை என்று சொன்னால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னுடைய தாத்தா, அம்மாவின் சொத்துக்களில் பாகம் வேண்டும் என்று இவ்வழக்கில் கேட்டிருக்கிறேன். 12.09.2018ல் 5ம் பிரதிவாதி எனக்கு கிரையம் ஆவணம் எதையும் எழுதி கொடுக்கவில்லை. 12.09.2018 அன்று என்னுடைய சகோதரிகள் எனக்கு ஒரு

விடுதலை ஆவணத்தை எழுதி கொடுத்தார்கள். அந்த விடுதலை ஆவணத்தை நான் படித்துபார்த்தேனா என்று கேட்டால் எனக்கு எழுத படிக்க தெரியாது. அந்த விடுதலை ஆவணத்தின் மூலம் எனக்கு 3 ஏக்கர் கொடுத்தார்கள். அதில் நான்குமால்கள் குறிப்பிடப்படவில்லை. நான்குமால்கள் போட்டு குறிப்பாக எழுதி கொடுத்தார்கள் என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திலேயே எனக்கு கொடுக்கப்பட்ட சொத்து மற்றும் பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்ட சொத்தும் தனித்தனியாக பிரித்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 15 வருடமாக சொத்தை வைத்திருப்பது எனக்கு தெரியும் என்றும் நான் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2018ம் வருடத்திய விடுதலை ஆவணத்தில் அனைத்து விவரங்களை கூறிவிட்டு 2020 ல் எனக்கு தெரியவந்தது என்று பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விடுதலை ஆவணம் மைற்றும் கிரைய ஆவணம் அடிப்படையில் தான் நான் 1வது பரிகாரத்தை கோரியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த கிரைய மற்றும் விடுதலை ஆவணங்களில் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் ஆகவே இவ்வழக்கு நிலைநிற்கதக்கதில்லை என்றால்சரியல்ல. தாவா சொத்துக்கள் ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்றும் ஆகவே பாகம் மீண்டும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. என் தந்தை உயிரோடு இருக்கும்போது சொத்துக்களை எழுதி கொடுத்துவிட்டார் என்றும் தற்போது நான் பாகம்

கேட்கமுடியாது என்றால் சரியல்ல. ஆகவே என் சகோதரிகள் சொத்துக்களை விற்பதற்கு அவர்களுக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. பிராது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.